4. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

7. பள்ளிக் கல்வித் துறையினால் 6-7-2007 ஆம் நாளன்று தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டில் வெளியிடப்பட்ட II(2)/SE/360(f2)/2007 *ஆம் எண் அறிவிக்கைக்கு சட்டவிதிகள் ஆய்வுக் குழு அளித்துள்ள பரிந்துரையின் அடிப்படையில் திருத்தம் செய்தது குறித்து 16-12-2015 ஆம் நாளிட்ட பள்ளிக் கல்வித் (பக5(1)) துறையின் அரசாணை (நிலை) எண் 203-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு கல்வி வளர்ச்சி நாள் (அறிவித்தல் மற்றும் கொண்டாடுதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 26/2006) 9 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]*

8. (i) *அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு, யாதொரு வணிகர், இந்திய இரயில்வே துறை மற்றும் தமிழ்நாட்டிலுள்ள ஏனைய மாநில அரசுகளின் துறைகள் உட்பட மாநில மற்றும் மத்திய அரசு துறைகளுக்கு முதலாவது விவர அட்டவணையில் குறிப்பிட்டுள்ள பொருட்களின் விற்பனை மீது செலுத்தத்தக்க வரி வீதத்தினை குறைத்தது குறித்தும்;* (ii) *அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு, யாதொரு வணிகர், மின்சக்திக்கான உற்பத்தி, அனுப்புகை மற்றும் பகிர்மானம் குறித்த பயன்பாட்டிற்காக அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ள நிறுவனங்களுக்கு பெட்ரோல், டீசல் மற்றும் சிமிட்டி நீங்கலான ஏனைய பொருட்களின் விற்பனைமீது செலுத்தத்தக்க வரி வீதத்தை குறைத்தது குறித்தும் வணிகவரி மற்றும் பதிவு (பி2) துறையின் 11-7-2011 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 77-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள். (மறுஅச்சு செய்யப்பட்டது) [2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 80(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]*

*9. 12-12-2014 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டின் பாகம்-*II, *பிரிவு 2-ல் வெளியிடப்பட்ட வணிக வரி மற்றும் பதிவுத் துறையின்* II(2)/CTR/751(d-1)/2014 *ஆம் எண் அறிவிக்கைக்கு வேறுபாட்டினை செய்தது குறித்து வணிக வரி மற்றும் பதிவு(பி2)த் துறையின் 12-11-2015ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 94-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2006ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 80(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]*

2016 ஜூலை 25]

10. 27-2-2013 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டின் பாகம்-II, பிரிவு 2-ல் வெளியிடப்பட்ட வணிக வரி மற்றும் பதிவுத் துறையின் II(2)/CTR/222/2013 ஆம் எண் அறிவிக்கைக்கு சட்டவிதிகள் ஆய்வுக் குழு அளித்துள்ள பரிந்துரைகளின் அடிப்படையில் வேறுபாடுகள் செய்தது குறித்து வணிக வரி மற்றும் பதிவு(பி2)த் துறையின் 17-12-2015 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 123-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2006ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 80(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

11. (i) 2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரி விதிகளில் திருத்தம் செய்தது குறித்தும்; மற்றும் (ii) 1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சிப் பரப்பிடங்களுக்குள் இயக்கூர்திகள் நுழைவின் மீதான வரி விதிகளில் திருத்தம் செய்தது குறித்தும் வணிக வரி மற்றும் பதிவு (பி1) துறையின் 20-12-2015 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 126-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள். [2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 80(5) பிரிவின்கீழ் மற்றும் 1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சிப் பரப்பிடங்களுக்குள் இயக்கூர்திகள் நுழைவின் மீதான வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1990) 18(4) பிரிவின்கீழ் முறையே பேரவைமுன் வைக்கப்பெற்றன.]

12. 2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரி விதிகளில் திருத்தம் செய்தது குறித்து வணிக வரி மற்றும் பதிவு (பி1) துறையின் 30-12-2015 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 133-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 80(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

13. மதுரை மாவட்டம், தே.கல்லுப்பட்டியைச் சேர்ந்த திருவாளர்கள் காந்திநிகேதன் ஊரக நலன் மற்றும் மேம்பாட்டு அறக்கட்டளையால் இயக்கப்படும் பயிற்சி மற்றும் உற்பத்தி மையங்களால் தயாரிக்கப்பட்டு விற்பனை செய்யப்படும் பொருட்களுக்கு அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைக்குட்பட்டு செலுத்தத்தக்க வரியிலிருந்து விலக்களித்தது

குறித்து வணிக வரி மற்றும் பதிவு (பி2) துறையின் 22-1-2016 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 9-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 80(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

14. (i) *2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரிச் சட்டத்தின் வகைமுறைகளின்கீழ் குறித்துரைக்கப்பட்டுள்ள அனைத்து வணிக நடவடிக்கைகளையும் மின்னணு மூலம் நிருவகிக்கும் பொருட்டு, 2000 ஆம் ஆண்டு தகவல் தொழில் நுட்பச் சட்டத்தில் (மத்தியச் சட்டம் 21/2000) அடங்கியுள்ள வகைமுறைகள் மற்றும் அதன்கீழ் இயற்றப்பெற்ற விதிகள் மற்றும் வழங்கப்பட்ட வழிமுறைகள் எந்த அளவிற்கு பொருந்துமோ அந்த அளவிற்கு மேற்சொன்ன சட்டத்தின்படியான நடவடிக்கைகளுக்கு கடைபிடிப்பது குறித்தும்;* (ii) *2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரி சட்டத்தின் பிரிவு 67-*A *ல் கூறப்பட்டுள்ள நோக்கங்களுக்காக அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ள பொருட்களை அறிவித்தது குறித்தும்;* (iii) *பதிவுபெற்ற வணிகருக்கு, சிறப்பு பொருளாதார மண்டலத்திற்குள் அத்தகைய அலகுகளை அல்லது அத்தகைய ஏனைய நிறுவனங்களை ஏற்படுத்துவதற்கு அல்லது மத்திய அரசால் குறிப்பிடப்பட்ட ஆணையத்தால் அத்தகைய சிறப்பு பொருளாதார மண்டலத்தை மேம்படுத்தி, செயல்பாட்டிற்கு கொண்டு வந்து பராமரிப்பதற்கு அனுமதியளிக்கப்பட்டிருப்பின், மத்திய அரசால் அறிவிக்கையிடப்பட்டவாறாக தமிழ்நாடு மாநிலத்தின் சிறப்பு பொருளாதார மண்டலத்தில் ஓர் அலகை ஏற்படுத்துவதற்கு, செயல்படுத்தி பராமரிக்கும் செயல் நோக்கத்திற்காக அல்லது சிறப்பு பொருளாதார மண்டலத்தின் மேம்பாட்டாளரால் சிறப்பு பொருளாதார மண்டலத்தை மேம்படுத்துவற்கு, செயல்படுத்துவதற்கு மற்றும் பராமரிப்பதற்கு, பதிவு பெற்ற வணிகருக்கு யாதொரு வணிகரால் விற்பனை செய்யப்பட்ட பொருட்கள் குறித்து அத்தகைய வணிகரால் செலுத்தத்தக்க வரியிலிருந்து அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு, விலக்களித்தது குறித்தும் வணிகவரி மற்றும் பதிவு (பி1) துறையின் 29-1-2016 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 15-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள். [2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 80(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]*